# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 154 | 4 Pages | 6.1.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 154 | 4 பக்கங்கள் | 6.1.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## உலக முதலீட்டாளர் மாநாடு மூலம் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜன.6

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் வருகிற 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளது.

தொழில் முதலீட்டை ஈர்ப்பதற்காக நடத்தப்படும் இந்த மாநாட்டில் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான தொழில் அதிபர்கள் பங்கேற்க இருக்கிறார்கள். பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளது.

இதையொட்டி வர்த்தக மையத்தில் அரங்கங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், உலக முதலீட்டாளர் மாநாடு மூலம் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

தமிழ்நாடு உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பு 2024 நெருங்கி வருவதால், எதிர்பார்ப்புடன் கூடிய காற்று வீசுகிறது.



30,000 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன், நம் பிரச்சாரங்கள், டைட்டன்ஸ் ஆப் தமிழ்நாடு மற்றும் ஒன் மில்லியன் ட்ரீம்ஸ் ஆகியவை உற்சாகத்தைத் தூண்டியுள்ளன.

#GIM2024ல் 450+ சர்வதேச பிரதிநிதிகள், 170 உலகப் புகழ் பெற்ற பேச்சாளர்கள் மற்றும் 50 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வதுடன், தமிழ்நாட்டின் தொழில் வளத்தை அடிக்கோடிட்டுக் காட்டும்.

நாங்கள் 26 சிந்தனை தலைமை அமர்வுகளை வரிசைப்படுத்தியுள்ளோம். எங்களிடம் ஒரு எம்எஸ்எம்இ பெவிலியன், தமிழ்நாடு சுற்றுச்சூழல் அமைப்பு பெவிலியன், பல நாட்டு அரங்குகள் மற்றும் ஸ்டார்ட்அப் டிஎன் பெவிலியன் ஆகியவை உள்ளன.

பிரதிநிதிகள் மாநிலத்தின் தொழில்துறை அதிசயத்தைக் காணவும் வணிக ஒத்துழைப்புகளை வளர்க்கவும் ஒரு அருமையான வாய்ப்பை வழங்குகிறது.

தமிழ்நாட்டின் தொழில்துறை மரபைக் கொண்டாடுவதிலும், நமது மாநிலம் வழங்கும் அபரிமிதமான ஆற்றலைப் பயன்படுத்துவதிலும் எங்களுடன் சேருங்கள்!

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் எழுத்துக்களால் உருவான 25 அடி உயர பிரமாண்ட திருவள்ளுவர் சிலை: முதலமைச்சர் திறந்து வைத்தார்

குனியமுத்தூர், ஜன.6

கோவை மாநகராட்சி சார்பில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கோவைபொள்ளாச்சி சாலையில் குறிச்சி கிழக்கு கரைப்பகுதியில் தமிழர் மரபை பிரதிபலிக்கும் வகையில் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை, பரதநாட்டியம் ஆடும் பெண், ஜல்லிக்கட்டு காளையை அடக்கும் வீரர்கள், சிலம்பம் ஆடும் வீரர்கள் என தலா 15 அடி உயரத்தில் 4 சிலைகள் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிலைகள் அனைத்தும் பைபர் பொருட்களால் செய்யப்பட்டுள்ளது. இந்த சிலைகளின் அருகே திறந்தவெளி அரங்கம் போல பொதுமக்கள் நின்று பார்க்கும் வகையில் செல்பி பாய்ண்ட் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதில் ஜல்லிக்கட்டு காளை, பொங்கல் பானை, தலையாட்டி பொம்மை, நடனமாடும் பெண், ஜல்லிக்கட்டு காளையை அடக்குவது, சக்கரம் ஆகிய கட்டமைப்புகளும் அதில் பொருத்தப்பட்டுள்ளன.

இதன் மறுபுறம் உள்ள குறிச்சி சின்னக்குளத்தில், உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து ஆகிய



247 தமிழ் எழுத்துகளை கொண்டு பிரமாண்டமான திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

25 அடி உயரத்தில் 25 அடி நீளம் 15 அடி அகலத்தில் இந்த சிலையானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அந்த வழியாக வாகனங்களில் செல்வோர் மற்றும் பொதுமக்கள் பார்த்து ரசித்து செல்கின்றனர்.

இந்நிலையில் தமிழ் எழுத்துக்களால் உருவாக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். சென்னை தலைமை செயலகத்தில் நடக்கும் விழாவில் காணொலி வாயிலாக பங்கேற்று இதனை திறந்து வைத்தார்.

இதேபோல் கோவை மாநகராட்சி ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.2.50 கோடி மதிப்பில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டப்பட்டுள்ளது. இந்த மையம் 48 சென்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் 7,800 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. தமிழ் எழுத்துக்களால் உருவான திருவள்ளுவர் சிலை மின்னொளியில் ஜொலிக்கும் காட்சி.

தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்டதாகும். இந்த நூலகத்தில் மொத்தம் 10 ஆயிரம் புத்தகங்கள் வைக்க முடியும். ஒரே நேரத்தில் 80 பேர் அமர்ந்து வாசிக்க ஏற்றவாறு இருக்கைகள் உள்ளன.

சிறுவர், சிறுமிகள், மாணவமாணவிகளுக்கு ஏற்ற நூல்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன. போட்டி தேர்வுகளுக்கு பயிற்சி பெறுபவர்கள் படிக்க தேவையான நூல்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த நூலகத்தையும் இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அதேபோல கோவை பெரியகுளத்தின் கரையில் அமைக்கப்பட்டுள்ள அனுபவ மையம் என்ற பொழுது போக்கு கட்டமைப்பையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

## ஜனவரி 19ம் தேதி மீண்டும் தமிழகம் வருகிறார் பிரதமர் மோடி

சென்னை, ஜன.6

பிரதமர் மோடி கடந்த 2ம் தேதி திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா விமான நிலையத்தின் புதிய முனைய திறப்பு விழாவில் பங்கேற்றார். இந்நிலையில், பிரதமர் மோடி 2வது முறையாக தமிழகம் வருகை தருகிறார். ஜனவரி 19ம் தேதி திருப்பூரில் கட்டப்பட்டு வரும் இ.எஸ்.ஐ. மருத்துவமனையை திறந்து வைக்கிறார். பா.ஜ.க. பொதுக்கூட்டத்திலும் பங்கேற்கி றார். பிரதமர் மோடி 2வது முறையாக தமிழகம் வருகை தரவுள்ளது பா.ஜ.க. தொண்டர்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாராளுமன்ற தேர்தல் நெருங்கும் நிலையில், மோடியின் வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு: எடப்பாடி பழனிசாமி நேரில் ஆஜராக ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஜன.6

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி, கொடநாடு பங்களாவில் நடந்த கொலை, கொள்ளை சம்பவத்தில் தொடர்புபடுத்தி வீடியோ வெளியிட்ட டெல்லி பத்திரிகையாளர் மேத்யூ சாமுவேல், வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சயான், மனோஜ் ஆகியோருக்கு எதிராக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 2019ல் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.


அந்த மனுவில், தன் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் பேசவும், வீடியோ வெளியிடவும் தடை விதிக்கும்படியும், ரூ.1.10 கோடி இழப்பீடும் கோரியிருந்தார். இந்த வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்ய சென்னை ஐகோர்ட் வளாகத்தில் உள்ள மாஸ்டர் கோர்ட்டுக்கு உத்தரவிடப்பட்டது.



இந்நிலையில், கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக ஜனவரி 30 மற்றும் 31ல் உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாஸ்டர் கோர்ட்டில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆஜராக வேண்டும் என சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

மாஸ்டர் கோர்ட்டில் ஆஜராக எடப்பாடி பழனிசாமிக்கு விலக்களித்ததை எதிர்த்த மேத்யூ சாமுவேலின் வழக்கில் சென்னை ஐகோர்ட்டு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

## அயோத்தியை உலகத்துடன் இணைப்பதில் எங்கள் அரசு உறுதியாக உள்ளது: பிரதமர் மோடி




புதுடெல்லி, ஜன.6

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகம் வரும் 22ம் தேதி நடைபெறுகிறது. இதையடுத்து, அயோத்தியில் புதிய விமான நிலையம் கட்டப்பட்டுள்ளது. விமான நிலையத்தின் முதல் கட்ட பணிக்கு ரூ.1,450 கோடி செலவானது.

ஆண்டுக்கு சுமார் 10 லட்சம் பயணிகளுக்கு சேவை செய்யும் வகையில் விமான நிலைய முனைய கட்டிடம் 6,500 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டது. முனையத்தின் முகப்பு கட்டிடம் அயோத்தி ராமர் கோவில் கட்டிடக் கலையை சித்தரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விமான நிலையத்தைக் கடந்த ஆண்டு டிசம்பர் 30ம் தேதி பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

இதற்கிடையே, அயோத்தி விமான நிலையத்திற்கு 'மகரிஷி வால்மீகி சர்வதேச விமான நிலையம், அயோத்தியாதாம்' என பெயரிடும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இந்நிலையில், பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், அயோத்தியை உலகத்துடன் இணைப்பதில் எங்கள் அரசு உறுதியாக உள்ளது. அயோத்தி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவித்து, அதற்கு 'மகரிஷி வால்மீகி சர்வதேச விமான நிலையம்' என பெயரிடும் திட்டத்திற்குமத்தியஅரசின்ஒப்புதலும்அளிக்கப்பட்டதுஎனபதிவிட்டுள்ளார்.

## 125 நாட்கள் பயணத்தை கடந்து இன்று இலக்கை அடைகிறது ஆதித்யா எல்1



ஆந்திரா, ஜன.6.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து ஆதித்யா எல்1 விண்கலம் கடந்த செப்டம்பர் 2ந்தேதி இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

இந்த விண்கலம், பூமியிலிருந்து சுமார் 15 லட்சம் கிலோ மீட்டர் தூரத்தை 125 நாட்கள் பயணித்த பிறகு, சூரியனுக்கு மிக அருகில் உள்ள லாக்ராஞ்சியன் புள்ளி எல்1 யைச் சுற்றி ஒரு ஹாலோ சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

ஏற்கனவே ஆதித்யாஎல்1 சூரியனின் முழுவட்டுப் படங்களை எடுத்து இந்த விண்கலம்பூமிக்குஅனுப்பிஉள்ளது. தொடர்ந்துஅறிவியல்சோதனைகளுக்காக சூரியன்தொடர்பானபடங்களைஎடுத்து இந்த விண்கலம் அனுப்ப இருக்கிறது. இந்தநிலையில் தற்போது ஆதித்யா எல்1 விண்கலத்தின் பயணம் இறுதிக் கட்டத்தை எட்டி உள்ளது.

சூரியனைஆய்வுசெய்வதற்கானஇந்தியாவின்முதல்விண்வெளிபயணமான ஆதித்யா எல்1 விண்கலம் அதன் இறுதிக் கட்டத்தை நெருங்கி வருகிறது.

எல்1 புள்ளியில் விண்கலம் நுழைவதற்கான கடைசி ஏற்பாடுகள் தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. வருகிற ஜனவரி 6ந்தேதி (நாளை) அன்று ஆதித்யா எல்1 புள்ளியில் நுழைகிறது.

குறிப்பாக, ஜனவரி 7ந்தேதிக்குள் இறுதி கட்டப்பணிகள் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்தார்.

பூமியிலிருந்து 15 லட்சம் கி.மீ., தொலைவில் உள்ள லக்ரேஞ்சியன்1 புள்ளியில் இருந்து, சூரியனின் மேற்புற அடுக்குகளான குரோமோஸ்பியர், போட்டோஸ்பியர் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்ய உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ரூ. 15 ஆயிரம் அடிப்படை விலை கொண்ட தாவூத் இப்ராகிம் சொத்து.. ரூ. 2 கோடிக்கு ஏலத்தில் விற்பனை



மும்பை, ஜன.6

மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் தேடப்பட்டு வரும் நிழல் உலக தாதா தாவூத் இப்ராகிம். இவர் பாகிஸ்தானில் பதுங்கி இருப்பதாக கூறப்படுகிறது. தேடப்படும் குற்றவாளியான தாவூத் இப்ராகிம் மற்றும் இவரது குடும்பத்தாருக்கு சொந்தமான சொத்துக்களை மத்திய அரசு பறிமுதல் செய்துள்ளது. கடத்தல் மற்றும் அந்நிய செலாவணி முறைகேடு தடுப்பு சட்டத்தின் கீழ் பறிமுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், தாவூத் இப்ராகிமின் தாய் அமினா பி பெயரில் உள்ள விவசாய நிலத்தை மத்திய அரசு ஏலத்தில் விட முடிவு செய்தது. அதன் படி ஏலம் இன்று நடைபெற்றது. மகாராஷ்டிரா மாநிலத்தின் ரத்னகிரி மாவட்டத்தில் உள்ள மும்பாகே கிராமத்தில் இருந்த நான்கு விவசாய நிலங்கள் ஏலத்தில் விற்பனைக்கு வந்தன.

இதில் இரண்டு நிலங்களை வாங்க யாரும் முன்வரவில்லை. ஆனால், ரூ. 15 ஆயிரம் என்ற மிக குறைந்த விலையில் ஏலத்திற்கு வந்த நிலம் ரூ. 2.01 கோடி விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலம் 170.98 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது ஆகும். இதே போன்று 1730 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மற்றொரு நிலம் ரூ. 3 லட்சத்து 28 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

தாவூத் இப்ராகிம் குடும்பத்தாருக்கு சொந்தமான நிலத்தை யார் வாங்கியது என்ற விவரங்கள் மர்மமாகவே வைக்கப்பட்டு உள்ளன. இன்று நடைபெற்ற ஏலத்திற்கு கடத்தல் மற்றும் அந்நிய செலாவணி மோசடி சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் அரசாணை 243ஐ ரத்து செய்தல் உள்ளிட்ட 10 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

அரியலூர், ஜன.6

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில அமைப்பின் வழி காட்டுதலின் அடிப்படையில் மாநிலம் தழுவிய வட்டாரத் தலைநகரங்களில் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையின் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




அரியலூர் வட்டார கிளையின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட நிகழ்வில் மாவட்டத் தலைவர் அருள்ஜோதி தலைமை வகித்தார்.

வட்டார செயலாளர் மாவட்டத் துணைத் தலைவர் சண்முகம் அவர்கள் அனைவரையும் வரவேற்று கோரிக்கை முழக்கங்களை எடுத்துக் கூறினார். மாநில செயற்குழு உறுப்பினர் சிவபாக்கியம் முன்னிலை வகித்தார்கள். வட்டாரப் பொருளாளர் சேகர் நன்றியுரை கூறினார். கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அரசாணை 243ஐ ரத்து செய்தல் உள்ளிட்ட 10 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி பல்துறை வளாகத்தில் அமைந்துள்ள வட்டாரக் கல்வி அலுவலகத்தின் முன்பு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி உறுப்பினர்கள் கோஷங்களை முன் வைத்தனர்.

# கோவை பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயாவில் குருபூஜை விழா

மேட்டுப்பாளையம், ஜன.6

கோவை, பெரியநாயக்கன் பாளையத்தில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் குருபூஜை விழா வரும் ஞாயிற்றுக்கிழமை ஜனவரி 07ஆம் தேதி நடக்கிறது.




இதில் முதல் நிகழ்ச்சியாக அதிகாலை 5 மணி முதல் ஆரத்தி, பூஜை மற்றும் பெரியநாயக்கன்பாளையம் பஜனைக்குழு, பாலமலை அரங்கநாதர் பஜனை குழு, அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக் கழக மாணவிகளின் பஜனை, தண்ட பாணி நாம சங்க கீர்த்தனை குழு வினரின் பஜனை, மேட்டுப்பாளையம் ஸ்ரீ வாசுதேவன் குழுவினரின் பஜனை, சுவாமி ஹரிவ்ரதானந்தரின் பஜனை நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

தொடர்ந்து காலை 7 மணி அளவில் வித்யாலய கொடியை ஏலகிரி ராமகிருஷ்ண மடத்தினுடைய தலைவர் சுவாமி விமோக்ஷானந்தர் ஏற்றி வைக்கிறார். அதைத் தொடர்ந்து 8 மணி அளவில் வித்யாலயா கலை அறிவியல் கல்லூரியின் சுயநதிப் பிரிவு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கலை மற்றும் கல்விப் பொருட்காட்சியை சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்து பார்வையிடுகிறார். பின்னர் முதன்மை விழா பந்தலில் நடக்கும் பொருட்காட்சி துவக்க விழாவில் சுவாமி விமோக்ஷானந்தர், நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதன் ஆகியோர் சொற்பொழிவாற் றுகின்றனர். அதில் குருபூஜையையொட்டி மாநில அளவில் நடைபெற்ற இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் மற்றும் வித்யாலயா கல்வி நிறுவனங்களில் படிக்கும் சிறந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன தொடர்ந்து வித்யாலத்தில் நீண்ட காலமாகப் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

முற்பகல் 11 மணி அளவில் சென்னை,சிவ ஸ்ரீ ஹரிணி குழுவினரின் நாம சங்கீர்த்தன நிகழ்ச்சியும், பிற்பகல் 1.30 மணி அளவில் வித்யாலயா கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. மாலை 3.30 மணியளவில் நடக்கும் பொதுக் கூட்டத்தில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்ற தலைப்பில் சுவாமி விமோக்ஷானந்தரும், குருமூர்த்தி குணநிதி சாரதாமணி என்ற தலைப்பில் திருமுறை ஞானமாமணி நடராஜன் ஷியாம் சுந்தர் சொற்பொழிவாற்றுகின்றனர் சென்னை கலைமாமணி அருண் குழுவினரின் கர்நாடக சங்கீத இசை நிகழ்ச்சி நடக்கிறது. மாலை 8 மணி அளவில் ஆரத்தியுடன் விழா நிறைவடைகிறது. விழாவையொட்டி மாபெரும் அன்னதானம், வித்யாலயா வரலாற்று புகைப்பட கண்காட்சி, ஸ்ரீராமகிருஷ்ண இயக்க புத்தகக் கண்காட்சி, ராமாயண தீம் பார்க் நிகழ்வுகள், முன்னாள் மாணவர்கள் சந்திப்பு உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விழாவில் அனைத்து பொதுமக்களும் கலந்து கொண்டு பயனடைய வேண்டும் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயா கல்வி நிறுவனங்களின் செயலர் சுவாமி கரிஷ்டானந்தர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கில் கலைஞர் புதைக்கப்படவில்லை, விதைக்கப்பட்டுள்ளது விதைகளாக ஆயிரம் கலைஞர் உருவாகுவர்கள்: அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன் புகழாரம்

கரூர், ஜன.6

கரூர் மாவட்டம் தாந்தோணி அரசு கலைக்கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்கில் அரசு தலைமை கொறடா கோவி. செழியன் கலெக்டர் மீ.தங்கவேல். தலைமையில் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ் ச்சியில் கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் க.கவிதா ஆகியோர் முன்னிலை வகுத்தார்கள்.



அரசு தலைமைக் கொறடா சிறப்புரையாற்றிய போது,, தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சிகளை நடத்துவதெற்கென தமிழக அரசால் 12 குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

அக்குழுக்களில் ஒன்றான 'சட்டமன்ற நாயகர் கலைஞர் என்ற குழு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு. அப்பாவு தலைமையில் முன்னாள் பேரவைத் தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்/ நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பள்ளிகள்/கல்லூரிகளில் (ஒரு மாவட்டத்திற்கு 3 பள்ளிகள் மற்றும் 3 கல்லூரிகள் என்ற வகையில்) நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது என்ற தலைப்பின்கீழ் கருத்தரங்கினை நடத்தப்படுகிறது.. அந்த அடிப்படையில் இதற்கென நான்கு துணைக் குழுக்களும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் கரூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கின்ற வகையில் கலைஞரின் நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டி மற்றும் கருத்தரங்கு விழா நடைபெற்றுகொண்டிருந்த சிறப்பு வேளையில் நான் பங்கு கொண்டு சிறப்புரை வழங்குவதில் பெருமை கொள்கிறேன். எங்கள் குழுவினர் ஏழு மாவட்டங்களுக்கு இதுவரை சென்றுள்ளோம் எங்கேயும் இல்லாத சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி கரூர் மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கல்லூரி மாணவ, மாண வியர்கள் கலைஞர் என்ற 4 எழுத்து கொண்ட சொற்களை உள்வாங்கி டாக்டர் கலைஞர் அவர்களின் சிறப்புக்களையும் அவர் வழி வகுத்த திட்டங்களை சிறப்பாக எடுத்துரைத்தார்கள்.

அதனை தொடர்ந்து மண்மங்கலம், அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், காக்காவாடி, ஜெய்ராம்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் நடைபெற்ற கருத்தரங்கில் அரசு தலைமை கொறடா கோவி. செழியன் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் சிறப்பாக கருத்துரை வழங்கிய 3 கல்லூரிகளை சேர்ந்த மூன்று மாணவர்களுக்கு முதல் பரிசாக தல ரூ.3000 ம், 2வது பரிசாக மூன்று மாணவர்களுக்கு தல ரூ.2000ம், 3வது பரிசாக மூன்று மாணவர்களுக்கு தலா ரூ.1000ம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. மேலும் கலந்து கொண்டு உரையாற்றிய அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

# அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உதவித்தொகை பெற தமிழ் அறிஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு

தூத்துக்குடி, ஜன.6

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாகச் சீரிளமைத் திறம் கொண்ட அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

முதுமைக்காலத்திலும் பொருள் வறுமை, தமிழ்த் தொண்டர் பெருமக்களைத் தாக்காவண்ணம் திங்கள்தோறும் ரூ.3500 ம், மருத்துவப்படி ரூ.500 ம் என நான்காயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பெறுகிறது.

தமிழுக்காகத் தம் வாழ்நாளை ஈந்துவரும் பெருமக்களுக்கு இந்த உதவித் தொகை அவர்கள் வாழுங்காலமெல்லாம் தமிழ்த் திருப்பணியில் தொய்வின்றி ரூடவ்டுபடும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது. தகைமைமேல் தகைமையாக, அகவை முதிர்ந்த தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது.

தமிழ் காத்த தகைமைக்காக உதவித் தொகை பெற்ற தமிழறிஞர் பெருமக்களின் மறைவுக்குப் பின்னர், அவரின் மரபுரிமையருக்கு, அவர்தம் வாழ்நாள் முழுவதும் ரூ.2500 மற்றும் மருத்துவப் படி ரூ. 500 என அத்திருத்தொண்டு தொடர்கிறது.



தமிழாய்ந்த தமிழ்மகனின் தமிழரசு தமிழ்த் தொண்டர்களைக் காக்கும் இப்பணியில் இதுகாறும் 1234 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் பயனடைந்துள்ளனர். அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் மறைவிற்குப் பிறகு அவர்களின் மரபுரிமையர்கள் 70 பேருக்கு தற்போது உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் அகவை முதிர்ந்த தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து 2023 – 2024 ஆம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கத் தகுதிகள்: 1) 01.01.2023 ஆம் நாளன்று 58 வயது நிறைவடைந்திருக்க வேண்டும். 2) ஆண்டு வருவாய் ரூ.72,000 க்குள் இருக்க வேண்டும். (வட்டாட்சியர் அலுவலகத்தில் இணையவழியில் பெறப்பட்ட வருமானச் சான்று இணைக்கப்பட வேண்டும்), 3)தமிழ்ப்பணி ஆற்றியமைக்கான விவரக் குறிப்பு. 4) தமிழ்ப்பணி ஆற்றி வருவதற்கான பரிந்துரைச் சான்று இரண்டு தமிழறிஞர்களிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் விண்ணப்பப் படிவத்தினை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்திலேயே நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலோ (www. tamilvalarcitura.t.gov.) கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படுபவருக்கு முன்னர்க் கூறியதுபோல், திங்கள் தோறும் உதவித்தொகையாக ரூ.3500 ம், மருத்துவப்படி ரூ.500 ம் அவருடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கிவரும் மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் 08.01.2024க்குள் அளிக்கப்பட வேண்டுமெனவும், நேரடியாக தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் அளிக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது எனவும் தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் கோ. லட்சுமிபதி தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் அரசாணை 243ஐ ரத்து செய்தல் உள்ளிட்ட 10 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

கோபி, ஜன.6

கோபிசெட்டி பாளையத்தில் புகழ்பெற்ற பாரியூர் கொண்டத்து காளியம்மன் கோயில் குண்டம் மற்றும் தேர்த்திருவிழாவிற்கு அதிகளவில் பக்தர்கள் குண்டம் இறங்கி நேர்த்திகடன் செலுத்துவார்கள் என்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் கோட்டாச்சியர் திவ்ய பிரியதர்ஷினி ஆலோசனை செய்தார். கோபிசெட்டி பாளையத்தில் புகழ்பெற்ற பாரியூர் கொண்டத்து காளியம்மன் கோயிலானது பல நூறு ஆண்டுகள் பழமையான கோயிலாகும். இந்த கோயிலில் ஆண்டு தோறும் ஜனவரி மாதம் குண்டம் மற்றும் தேர்த்திருவிழா நடைபெறுவது வழக்கம்.



இந்த ஆண்டு குண்டம் மற்றும் தேர்த்திருவிழா கடந்த டிசம்பர் 28 ம் தேதி பூச்சாட்டுதலுடன் தொடங்கியது. அதைத் தொடர்ந்து திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாக 8 ம் தேதி சந்தனகாப்பு அலங்காரமும், 10 ம் தேதி இரவு குண்டம் திறப்பு நிகழ்ச்சியும், 11ம் தேதி அதிகாலை திருவிழாவின் முக்கிய நிகழ்வான குண்டம் இறங்கி நேர்த்தி கடன் செலுத்துதல் நடைபெற உள்ளது.

திருவிழாவின் போது அதிகளவு பக்தர்கள் வருவர்கள் என்பதால் கூடுதல் பாதுகாப்பு, பக்தர்கள் அதிகமாக கூடும் இடங்களில் கண்காணிப்பு காமிராக்கள், தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ் வாகனங்கள், 24 மணி நேரம் மருத்துவ குழுவினர், திருவிழா நடைபெறும் ஒரு வார காலத்திற்கு 24 மணி நேரமும் அரசு பேருந்து போக்குவரத்து வசதி, அடிப்படை வசதிகளான குடிநீர், தற்காலிக கழிப்பறை உள்ளிட்டவை குறித்த ஆலோசனை கூட்டம் கோபி கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் திவ்ய பிரியதர்ஷினி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை, பொது சுகாதாரத்துறை, தீயணைப்புத்துறையினர், நகராட்சி மற்றும் உள்ளாட்சித்துறை, காவல்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகளும் கோயில் விழாக்குழுவினர், பரம்பரை அறங்காவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்புவனம் மற்றும் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற 3 திட்ட பணிகள்: அமைச்சர் திறந்து வைத்தார்

சிவகங்கை, ஜன.6

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் மற்றும் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள் முன்னிலையில், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடங்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கான கட்டிடம் ஆகியவைகளை திறந்து வைத்து தெரிவிக்கையில்

முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் வழியில், தமிழகத்தில் சிறப்பான ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர், அனைத்துத்துறைகளின் மேம்பாட்டிற்கென பல்வேறு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், ஜனநாயகத்தின் ஆணிவேராக திகழ்கின்ற கிராமப்புறங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, நகரங்களுக்கு இணையாக கிராமப்புறங்களிலும் அனைத்து மேம்பாட்டு வசதிகளையும் மேம்படுத்திடும் பொருட்டு, அதற்கான நடவடிக்கைகள் தமிழக முழுவதும் நடைபெற்று வருகிறது.





அதனடிப்படையில், கிராமங்கள் நிறைந்த மாவட்டமாக சிவகங்கை மாவட்டம் திகழ்கிறது. கிராமங்களில் அடிப்படை தேவைகள் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகிறது. அதன் காரணமாக கிராமங்களை விட்டு நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வதை தவிர்த்திடும் பொருட்டும், அனைத்து அடிப்படை கட்டமைப்புக்களை மேம்படுத்தி, தேவைகளை நிறைவேற்றும் விதமாக, சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் சார்பிலும் மற்றும் மக்கள் பிரதி நிதிகள் மூலமாகவும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படை யில், ஒவ்வொரு ஊராட்சியிலும் ஊராட்சி மன்ற அலுவலங்களுக்கான புதிய கட்டிடங்கள் ஏற்படுத்தி தரப்படும் என்ற தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவிற்கிணங்க, புதிய ஊராட்சி மன்ற அலுவலங்கள் புதிதாக கட்டப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்றைய தினம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டதட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.25.99 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் மற்றும் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேம்பத்தூர் ஊராட்சியில் ரூ.25.99 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், அதே பகுதியில், ரூ.9.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கான கட்டிடம் என மொத்தம் ரூ.61.58 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற 3 திட்ட பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட பகுதிகளில் சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைப்பதகான பூமி பூஜை

கிருஷ்ணகிரி ஜன,6.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்,கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட, கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம், வெங்கடாபுரம் ஊராட்சி அதியமான் நகர் , கணபதி நகர் மற்றும் குல் நகரில், 15 வது நிதிக்குழு மாணியம் கனிமங்களும் குவாரிகளும் நிதியில் இருந்து ரூ: 87.40 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை , சிமெண்ட் சாலை ,ஜல்லிசாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைப்பதற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார். உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள் ,ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள் ,அனைத்து அணிகளின், தலைவர்கள் , துணை தலைவர்கள் , அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கழகச் தோழர்கள், என அனைவரும் கலந்து கொண்டு பூமிபூஜையினை சிறப்பித்தார்கள்.



# காரைக்குடி குளோபல் மிஷின் மருத்துவமனையில், அட்வான்ஸ்டு லேப்ராஸ் கோப்பி மூலம், 17 வயது சிறுமிக்கு 7 கிலோ சினைப்பை நீர்க்கட்டியை அகற்றி சாதனை

காரைக்குடி, ஜன.5

காரைக்குடி குளோபல் மிஷின் மருத்துவமனையில் (அட்வான்ஸ்டு லேப்ராஸ்கோப்பி) மூலம் அறுவை சிகிச்சை செய்யாமலேயே நுண்துளை தொழில்நுட்பத்தின் வாயிலாக, கத்தியின்றி, இரத்தமின்றி, தழும்பின்றி .17 வயது சிறுமிக்கு, வயிற்றில் 7 கிலோ அளவுள்ள சினைப்பை நீர்க்கட்டியை மருத்துவமனை சிறப்பு மருத்துவர் டாக்டர் அருண் மொழி விஜய் அவர்கள் தலைமையில் அகற்றி சாதனை.

இது குறித்து மருத்துவமனை தலைமை மருத்துவர் டாக்டர். .குமரேசன் அவர்கள் கூறும் போது, காரைக்குடி அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்த 17 வயது ஆன சிறுமி கடந்த ஆறு மாதமாக வயிற்று வலி மற்றும் வயிறு வீக்கத்தால் அவதிப்பட்டு பல இடங்களில் மருத்துவம் பார்த்தும் குறையாத நிலையில் கடும் வயிற்று வலியில் துடிதுடித்த நிலையில் நேற்று இரவு (3ஆம் தேதி) நமது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரை ஸ்கேன் மூலம் பரிசோதனை செய்ததில் சினைப்பை நீர்க்கட்டி பெரிய அளவில் 7 கிலோ இருப்பதை உறுதி செய்தோம். உடனடியாக நமது மருத்துவமனை அட்வான்ஸ்டு லேப்ராஸ் கோப்பி சிறப்பு மருத்துவர் அழைக்கப்பட்டு பரிசோதித்து அவர் ஆலோசனையின் படி கத்தியினறி, இரத்தமின்றி, தழும்பின்றி நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வெற்றிகரமாக 7 கிலோ நீர் கட்டியை அகற்றினோம். இப்போது சிறுமி நலமாக உள்ளார் என தெரிவித்தார்.

# தென்காசி மாவட்டத்தில் மஞ்சப்பை விருதுகள்: மாவட்ட கலெக்டர் அறிவிப்பு

தென்காசி, ஜன.6

“மீண்டும் மஞ்சப்பை” பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சட்டப்பேரவையில் 2023–24 நிதியாண்டுக்கான அறிவிப்புகளில், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழியின் தடையை திறம்பட செயல்படுத்தி, தங்கள் வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாத வளாகமாக மாற்றும் சிறந்த பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு மஞ்சப்பை விருதுகள் வழங்கப்படும் என அறிவித்தார்.

இதன்படி ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் கைப்பைகளுக்கு மாற்றாக மஞ்சப்பை (மஞ்சள் துணி பை) போன்ற பாரம்பரியமான சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளின் பயன்பாட்டை ஊக்குவித்து சிறப்பாக செயல்படுத்தும் 3 சிறந்த பள்ளிகள், 3 சிறந்த கல்லூரிகள் மற்றும் 3 சிறந்த வணிக வளாகங்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படும். விருது பெறுவோர்களுக்கு, முதல் பரிசாக ரூ.10 லட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.5 லட்சமும், மூன்றாம் பரிசாக ரூ. 3 லட்சமும் வழங்கப்படும்.

இந்த அறிவிப்பின்படி, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால், பிளாஸ்டிக் இல்லாத வளாகங்களாக மாற்ற ஊக்குவிப்பதில் முன்மாதிரியாக திகழும் பள்ளிகள்/ கல்லூரிகள்/ வணிக வளாகங்களுக்கு மஞ்சப்பை விருதுகள் வழங்கப்படும். இதற்கான விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி : 01.05.2024 . விண்ணப்ப படிவத்தில் உள்ள இணைப்புகள் தனிநபர் / நிறுவனத் தலைவரால் முறையாக கையொப்ப மிடப்பட்டிருக்கவேண்டும். கையொப்பமிட்ட பிரதிகள் 2 மற்றும் குறுவட்டு இரண்டினை சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் முடிவுற்ற திட்ட பணிகள் அமைச்சர் அடிக்கல் நாட்டினார்



திண்டுக்கல், ஜன.6

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி முன்னிலையில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.8.58 கோடி மதிப்பீட்டில் பல்வேறு இடங்களில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றது முதல் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் சிறப்பான ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். குடும்பத்தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் தகுதியுள்ளவர்கள் யாரும் விடுபட்டுவிடக் கூடாது, தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, இத்திட்டத்தில் விடுபட்ட தகுதியான நபர்கள் உரிய ஆவணங்களுடன் மேல்முறையீடு செய்து விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி 11.85 இலட்சம் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. அதில் தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்ற தொகுதிக்கு காவிரி நீர் ஆதாரத்தைக்கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த சுமார் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் காவிரி குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் வரும் 30 ஆண்டு காலங்களுக்கு இங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது. அந்த வகையில் குடிநீர் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டு, குடிநீர் விநியோகிக்கப் படவுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர், பொதுமக்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்காகவும், மாணவ, மாணவிகளின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக சுகாதாரத்துறைக்கும், கல்வித்துறைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து நிதி ஒதுக்கீடு செய்து, திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பழனி மற்றும் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைகள் அடுக்குமாடி கட்டடத்துடன் அனைத்து மருத்துவ கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர், தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அவருக்கு என்றென்றும் உறுதுணையுடன் இருக்க வேண்டும், என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

# 9ம் வகுப்பு மாணவன் தற்கொலை: பள்ளி முன்பு உறவினர்கள் போராட்டம்



நெல்லை, ஜன.6

பாளையங்கோட்டை சாந்தி நகர் போலீஸ் காலனியை சேர்ந்தவர் நாகராஜன். இவருக்கு மனைவி மற்றும் நரேன் (வயது 14), சுஜித்(11) ஆகிய 2 மகன்கள் உள்ளனர்.

நாகராஜன் தனியார் கட்டுமான நிறுவனத்தில் ஊழியராக பணியாற்றி வருகிறார். இவரது மனைவி பாளையில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். நரேன் பாளை திருச்செந்தூர் சாலையில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் 9ம் வகுப்பும், சுஜித் அதே பள்ளியில் 5ம் வகுப்பும் படித்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று நரேன் பள்ளிக்கு செல்லவில்லை. அவரது தம்பி சுஜித் மட்டும் பள்ளிக்கு சென்றுள்ளார். அவரது பெற்றோர் வேலைக்கு சென்றுவிட்டனர். இதனால் நரேன் மட்டும் வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

இந்நிலையில் மாலையில் நாகராஜன், தனது 2வது மகனை பள்ளிக்கு சென்று அழைத்துக் கொண்டு வீடு திரும்பியுள்ளார். அப்போது வீட்டின் கதவு பூட்டிக்கிடந்துள்ளது. உடனே நாகராஜன் கதவை தட்டியுள்ளார். ஆனால் உள்ளே இருந்த நரேன் கதவை திறக்கவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த நாகராஜன் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்துள்ளார்.

அப்போது நரேன் வேஷ்டியால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் பிணமாக தொங்கி கொண்டிருந்தார்.

அவரது உடலை பார்த்து நாகராஜன் அலறி துடித்தார். தகவல் அறிந்து வந்த அவரது மனைவியும் மகனின் உடலை பார்த்து கதறி அழுதார். இதுகுறித்து பாளை போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் சிறுவனின் உடலை மீட்டு நெல்லை அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். அவரது தற்கொலைக்கான காரணம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நரேன் கடந்த 2 ஆண்டுகளாக சரியாக படிக்கவில்லை என்று கூறப்படுகிறது. சமீபத்தில் நடந்த தேர்வு ஒன்றில் மிகக்குறைவான மதிப்பெண் எடுத்ததாகவும், இதனால் அவனது பெற்றோரை பள்ளிக்கு அழைத்த நிர்வாகம், நரேனின் படிப்பு குறித்து கூறி கண்டித்ததாகவும் கூறப்படுகிறது.

இதன்காரணமாக நரேன் மன உளைச்சல் அடைந்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாமா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே மாணவன் தற்கொலைக்கு பள்ளி நிர்வாகத்தின் நெருக்கடியே காரணம் என குற்றம் சாட்டி மாணவனின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் இன்று பள்ளியின் முன்பு திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து அவர்களுடன் உதவி போலீஸ் கமிஷனர் ஆவுடையப்பன், இன்ஸ்பெக்டர் ஹரிஹரன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது ஆர்.டி.ஓ. அயூப்கான், மாவட்ட கல்வி அலுவலர் ராஜா ஆகியோர் சம்பந்தப்பட்ட பள்ளிக்கு சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்கள் கொடுக்கும் அறிக்கையின்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் தெரிவித்தனர். எனினும் அவர்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். திடீரென அவர்கள் சாலை மறியலுக்கு முயன்றனர். அவர்களுக்கு ஆதரவாக சில அமைப்பினர்களும் திரண்டனர்.

இதைத்தொடர்ந்து போலீசார் அவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

# நெல்லை மாவட்டத்தில் “வேர்களைத் தேடி” திட்டத்தின் கீழ் தமிழர்கள் பார்வையிட்டார்கள்



நெல்லை, ஜன.6

திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை தந்த அயலகத்தில் வாழும் தமிழர்களை மாவட்ட சுற்றுலா அலுவலர் சிவராமன் வரவேற்றார்கள்.

அயலகத்தில் வாழும் தமிழர்களின் நலன் காக்கவும், அயலகத்திற்கு தமிழ்நாட்டில் இருந்து கல்வி, வேலைவாய்ப்புகள் என்று இடம்பெயரும் தமிழர்களை பாதுகாப்பாக வழிநடத்தவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலுடன் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை’ செயல்பட்டு வருகிறது.

அயலகத் தமிழ் உறவுகளை ஒன்றிணைக்கும் முகமாக தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் தினம்“ எனும் சிறப்பு தினத்தை அறிவித்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய நாட்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சென்னையில் பிரமாண்டமாக கொண்டாடி வருகிறது.

அயலகத் தமிழர்களின் கலச்சார உறவுகளை மேம்படுத்துவதின் ஒரு பகுதியாக, பல தலைமுறைகளுக்கு முன்பு அயலகம் இடம்பெயர்த்து அங்கு வாழும் அயல கத்தமிழர்களின் குழந்தைகளுக்காக வேர்களைத்தேடி என்றொரு பண்பாட்டுப் பயணத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்கள். இத்திட்டம் மூலம் அயலகத்தில் வாழும் தமிழ் இளைஞர்களை தமிழ்நாடு அரசு செலவில் தமிழ்நாட்டிற்கு வரவழைத்து, அவர்கள் தமிழ் மற்றும் தமிழர்தம் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு ஒரு பண்பாட்டு பயணம் மேற்கொள்ள உத்திரவிட்டிருந்தார்.

இதனடிப்படையில் வேர்களைத் தேடி திட்டத்தின் முதல் பயணம் டிசம்பர் 27 ஆம் தேதி மகாபலிபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஓட்டலில் இருந்து தொடங்கியது. மாண்புமிகு தமிழ்நாடு அயலகத் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் இப்பண்பாட்டு பயணத்தை துவக்கி வைத்தார். இப்பண்பாட்டு பயணத்திற்காக ஆஸ்திரேலியா, கனடா, பீஜி இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து 57 இளைஞர்கள் தேர்வாகி தமிழ்நாடு அரசு செலவில் வந்துள்ளனர்.

இவர்கள் சென்னையில் இருந்து மகாபலிபுரம் தஞ்சாவூர், சிவகங்கை தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் பயணித்து, தற்போது திருநெல்வேலி மாவட்டம், டவுணில் அமைந்துள்ள நெல்லையப்பர், அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோயிலுள்ள சிற்பங்கள், இசைத் தூண்கள், சிலைகள் உள்ளிட்டவைகளை சுற்றி பார்த்து, இங்குள்ள ஆயிரங்கால் மண்டபம், இசைத்தூண்கள் ஆகியவற்றை ஆர்வத்துடன் கண்டுகளித்தனர். தாமிர சபை மரச்சிற்பங்களை நுட்பமான வடிவமைப்பினைக் கண்டு வியந்தனர்.

அதனைத்தொடர்ந்து, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்திலுள்ள நூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறு குறித்து அமைக்கப்பட்டுள்ள ஒலி, ஒளி காட்சியினை பார்வையிட்டார்கள். மேலும், நெல்லையப்பர், அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோயில் வரலாறு மற்றும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை வரலாறு குறித்து எழுத்தாளர் நாறும்பூநாதன் விளக்கி எடுத்துரைத்ததை அயலகத்தில் வாழும் தமிழர்கள் ஆர்வத்துடன் கேட்டறிந்தார்கள்.

# இன்ஸ்டாகிராம் மூலம் தொல்லை செய்ததால் மோதல்: திருப்பூரில் நண்பர்களை கத்தியால் குத்திய 2பேர் கைது





அவிநாசி, ஜன.6

திருப்பூர் வாஷிங்டன் பகுதியை சேர்ந்தவர் மோகன். இவரது மகன் கோபி (வயது 24). இவர் தனது நண்பர்களான அதே பகுதியை சேர்ந்த சிவா (24) மற்றும் நான்கு நண்பர்களுடன் அவிநாசியை அடுத்து பழங்கரைஅருகே உள்ள கள்ளுமடை குட்டை பகுதியில் புத்தாண்டு தினத்தன்று மது அருந்திபுத்தாண்டுகொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, இவர்களின் நண்பர்களான திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூரை அடுத்துள்ள ஈட்டி வீரம்பாளையம் பகுதியை சேர்ந்த ஜெயராம் (22), பாஸ்கரன் (22) மற்றும் லட்சுமிகார்டன்பகுதியை சேர்ந்த 18 வயது சிறுவன் ஆகிய மூவரும் அங்கு வந்து மது அருந்தியுள்ளனர்.

இந்நிலையில், கோபியின் வேறொரு நண்பரான வசந்தகுமார் என்பவருக்கு, அவர்களோடு மது அருந்திக் கொண்டிருந்த 18 வயது சிறுவன் கடந்த சில நாட்களாக இன்ஸ்டாகிராமில் போலியாக பெண் போன்ற முகவரியில் இருந்து பேசி துன்புறுத்திவந்தது குறித்து தெரியவந்தது. முன்னதாக வசந்த குமாரும் அவரது மற்றொரு நண்பரான ஜெகதீஸ் என்பவரும் சேர்ந்து புத்தாண்டிற்கு முந்தைய நாள் லட்சுமி கார்டன் பகுதியில் உள்ள 18 வயது சிறுவன் வீட்டிற்கு சென்று சிறுவனின் கன்னத்தில் அறைந்துள்ளனர். இது குறித்து 18 வயது சிறுவனும் அவருடன் வந்த ஜெயராம் மற்றும் பாஸ்கரும், கோபி மற்றும் நண்பர்களிடம் கேட்டுள்ளனர். அதற்கு போலி இன்ஸ்டாகிராம் முகவரியில் பெண் போல பேசி துன்புறுத்தினால் அப்படித்தான் அடிப்போம் என கோபி மற்றும் நண்பர்கள் கூறியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த ஜெயராம், அதற்கு தான் கொல்ல வந்துள்ளோம் என சொல்லிக் கொண்டே, தான்மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கோபியின் இடது மார்புக்கு மேல் குத்தியுள்ளார். அதே சமயத்தில், பாஸ்கர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சிவாவின் முதுகில் வலது பக்கமும், 18 வயது சிறுவன் சிவாவின் வலது பின் தோள்பட்டையிலும் குத்தியுள்ளனர். இதனால், வலி தாங்க முடியாமல் அவர்கள் கூச்சலிட்டதை அடுத்து 18 வயது சிறுவன் உட்பட மூவரும் தப்பியோடியுள்ளனர்.

காயம்பட்ட கோபி மற்றும் சிவாவை அவர்களது நண்பர்கள் உடனடியாக மீட்டு திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று முதலுதவி சிகிச்சை அளித்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இச்சம்பவம் குறித்து அவிநாசி போலீசார் கொலை முயற்சி வழக்காக பதிவு செய்து, ஜெயராம், பாஸ்கர் ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் 18 வயது சிறுவனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கோவை சிறுவர் சீர்திருத்தப்பள்ளியில் சேர்த்தனர். அவர்களிடமிருந்து கத்திகளையும் பறிமுதல் செய்தனர்.

# நீண்ட நேரம் செல்போன் பார்த்ததை தாய் கண்டித்ததால் மகன் தற்கொலை



வத்திராயிருப்பு, ஜன 5

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் நீண்ட நேரம் செல்போன் பார்ப்பதை வாடிக்கையாக கொண்டிருந்த பள்ளி மாணவனை அவரது தாய் கண்டித்ததால் தற்கொலை செய்து கொண்டான்.

வத்திராயிருப்பு மேலப்பாளையத்தை சேர்ந்த மதுரைவீரன். தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி கலையரசி கூலி வேலைக்கு சென்று வருகிறார். இவர்களது மகன் மருதுகணேஷ்(14) வத்திராயிருப்பு தனியார் பள்ளியில் 9 ம் வகுப்பு படித்து வந்தார்.

அதிக நேரம் செல்போன் பார்ப்பதை வழக்கமாக கொண்டிருந்தார். இதனை பெற்றோர் இருவரும் அடிக்கடி கண்டித்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த இரு தினங்களுக்கு முன் நீண்ட நேரம் செல்போனில் படம் பார்த்துக் கொண்டிருந்த மகனை கண்ட தாய் கலையரசி “பரீட்சை நேரத்தில் இப்படி செல்போன் பார்த்துக் கொண்டிருந்தால் எப்படி படிப்பாய்” என கேட்டு கண்டித்தார். அத்துடன் செல்போனையும் அவரிடம் இருந்து பறித்துக் கொண்டார்.

இதனால் மனம் உடைந்த மருது கணேஷ் வீட்டில் அனைவரும் வேலைக்கு சென்று இருந்த சமயத்தில் படுக்கை அறையில் இருந்த பேனில் துணி மூலம் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். வத்திராயிருப்பு போலீசார் அவரது உடலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து பிரேத பரிசோதனை முடிந்து உடலை பெற்றோரிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

# திருவள்ளூரில் அரசு நிலம் மீட்பு அதிகாரிகள் நடவடிக்கை

திருவள்ளூர், ஜன.6

திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகம் அருகே சென்னைதிருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் அரசுக்கு சொந்தமான நிலத்தில் கடந்த 1991ல் அரசு ஓய்வூதியர் சங்கம் சார்பில் கட்டிடம் கட்டப்பட்டது.

அப்போது கட்டிடம் அருகில் உள்ள 51 சென்ட் நிலத்தையும் ஆக்கிரமித்து மேல் வாடகைக்கு சைக்கிள் ஸ்டான்ட்நடத்தகுத்தகைக்குவிட்டதாககூறப்படுகிறது.


நகரின் முக்கிய சாலையில், வட்டாட்சியர் அலுவலகம் அருகில் கிட்டத்தட்ட 32 வருடமாக இருந்த ஆக்கிரமிப்பு அகற்றப்படாமல் இருந்தது.

இதுகுறித்து மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமாருக்கு தொடர்ந்து புகார்கள் வந்தன. இதைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பை அகற்ற அதிரடியாக உத்தரவிட்டார். இதையடுத்து வட்டாட்சியர் சுரேஷ்குமார், நகராட்சி ஆணையர் போ.வி.சுரேந்திரஷா, நகர அமைப்பு அலுவலர் குணசேகரன், சுகாதார அலுவலர் கோவிந்தராஜ் மற்றும் அதிகாரிகள் ஜே.சி.பி எந்திரத்துடன் இன்று காலை வந்தனர்.

அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டு இருந்த தடுப்புகளை ஜே.சி.பி.எந்திரத்தால் இடித்து அகற்றினர். முன்னதாக அங்கு நிறுத்தப்பட்டு இருந்த மோட்டார் சைக்கிள்களை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தினர். இதனால் அப்பகுதி பரபரப்பாக காணப்பட்டது.

இன்ஸ்பெக்டர் அந்தோணி ஸ்டாலின் தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இதுகுறித்து அதிகாரிகள் கூறும்போது, மீட்கப்பட்ட இடத்தின் மதிப்பு ரூ.51 கோடி இருக்கும். அந்த இடத்தில் நகராட்சி சார்பில் மேல்நிலைப்பள்ளி கட்ட நடவடிக்கை எடுக்கப் பட உள்ளது என்றனர்.

நமது தின கனி
Title-Code:-TNTAM26.1.
R.Dis No:- 968/2023
6.1.2024



## ரூ.100 கோடி வசூல் முதலில் சாதித்த நடிகை யார் தெரியுமா?

முன்னணி இயக்குனர்கள் மற்றும் கதாநாயகர்களின் திரைப்படங்கள், ரூ.100 கோடி வசூல் இலக்கை தொட்டால்தான் அதை வெற்றி படமாக இன்னாளில் கருதுகிறார்கள்.

இந்தி திரையுலகினர் மட்டுமின்றி தென்னிந்திய கதாநாயகர்களின் படங்களும் ரூ.100 கோடி வசூலை எட்டுவது சாதாரணமாகி விட்டது.

கதாநாயகர்கள் மட்டுமின்றி மாதுரி தீக்ஷித், ஸ்ரீதேவி, தீபிகா படுகோன், ஐஸ்வர்யா ராய், பிரியங்கா சோப்ரா, ஆலியா பட் உள்ளிட்ட பலர் கதாநாயகியாக நடித்த இந்தி திரைப்படங்கள் ரூ.100 கோடி இலக்கை எட்டியுள்ளன.

ஆனால், பாலிவுட்டில் (இந்தி திரையுலகம்) முதல் முதலாக ரூ.100 கோடி வசூலை அள்ளி குவித்த வெற்றி படகதாநாயகிஇவர்களில்எவரும்அல்ல ;கதாநாயகனும் 3 "கான்"களில் ஒருவர் அல்ல.

1982ல் பப்பார் சுபாஷ் (Babbar Subhash) இயக்கத்தில் வெளியான இந்தி திரைப்படம் டிஸ்கோ டான்சர் (Disco Dancer). இதில் கதாநாயகனாக மிதுன் சக்ரபொர்த்தியும் (மிதுன் Chakraborty) கதாநாயகியாக கிம் யஷ்பால் (Kim Yashpal) எனும் பிரபல மாடல் ஒருவரும் நடித்திருந்தனர்.

ஆடல்,பாடல்கதைக்களத்தில்உருவானஇப்படத்தில் 8 பாடல்களுமே சூப்பர் ஹிட் ஆனது. மேலும், அரங்குகள் நிறைந்த காட்சிகளாக இந்தியா மட்டுமின்றி அயல்நாடுகளிலும் வெற்றிகரமாக ஓடி ரூ.100 கோடிக்கு மேல் வசூலை அள்ளியது.

மத்திய ஆசியா, கிழக்கு ஐரோப்பா, ரஷியா, சினா, அரபு நாடுகள், துருக்கி, ஆப்பிரிக்க நாடுகள் என திரையிட்ட இடங்களிலெல்லாம், டிஸ்கோ டான்சர், வெற்றி வாகை சூடியது.

ஒரு இந்தி திரைப்படம் வசூலில் ரூ.100 கோடிக்கும் மேல் முதல் முதலாக தொட்டது தயாரிப்பாளர்களே எதிர்பாராத ஒரு ஆச்சரியம்.

மிதுனுக்காக பெண் ரசிகைகளும், கிம் யஷ்பாலிற்காக ஆண் ரசிகர்களும் இப்படத்தை மீண்டும் மீண்டும் பார்த்தனர். பல இளைஞர்களின் கனவுக்கன்னியாக கிம் வலம் வந்தார்.

டிஸ்கோ டான்சர் வெற்றிக்கு பிறகு கிம்மிற்கென பெரும்ரசிகர்பட்டாளம்உருவாகியிருந்தும்படிப்படியே திரைப்படங்களில் நடிப்பதை குறைத்து கொண்டார் கிம். கிம்மின் தற்போதைய நிலவரம் குறித்து தகவல்கள் இல்லை. 1985ல், ஆனந்த்பாபு கதாநாயகனாக நடித்து, தமிழில் "பாடும் வானம்பாடி" எனும் பெயரில் டிஸ்கோ டான்சர் ரீமேக் செய்யப்பட்டு வெற்றி படமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.


## செஞ்சு முடிக்கிறனோ இல்லையோ, இனிமே இது என்னோட வேலை.. வைரலாகும் அயலான் டிரைலர்

ஆர். ரவிகுமார் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள திரைப்படம் 'அயலான்'. ஏ.ஆர். ரகுமான் இசையில், ரகுல் பிரீத் சிங், யோகி பாபு, கருணாகரன் உள்ளிட்ட பலர் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்தை 24 ஏ.எம். ஸ்டுடியோஸ் மற்றும் கே.ஜே.ஆர். ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.



சிவகார்த்திகேயன் நடித்து வெளியான படங்களிலேயே அதிகப்படியான நாடுகள் மற்றும் திரைகளில் வெளியாகவுள்ள திரைப்படம் 'அயலான்' தான் என படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தது. 'அயலான்' திரைப்படம் பொங்கலுக்கு திரையரங்கில் வெளியாகவுள்ளது.

இந்த நிலையில், அயலான் படத்தின் டிரைலரை படக்குழு வெளியிட்டுள்ளது. முன்னதாக இந்த படத்திற்கு தணிக்கை குழு 'யு' சான்றிதழ் வழங்கியுள்ளதாக படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்து இருந்தது. இந்த படம் குடும்பங்கள் பார்த்து ரசிக்கும் வகையில் சான்றிதழ் வழங்கப்பட்டு இருப்பதால் ரசிகர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.



## காத்திருப்பை நிறைவு செய்த கேப்டன் மில்லர் படக்குழு அதிகாரப்பூர்வ அறிவிப்பு

தனுஷ் நடிப்பில் உருவாகி இருக்கும் புதிய படம் 'கேப்டன் மில்லர்'. அருண் மாதேஸ்வரன் இயக்கி இருக்கும் இந்த படம் ஜனவரி 12ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ள இப்படத்தை சத்ய ஜோதி பிலிம்ஸ் தயாரித்துள்ளது.

இந்த படத்தில் பிரியங்கா அருள் மோகன், நிவேதிதா சதிஷ், ஜான் கொக்கன், சுமேஷ் மூர் மற்றும் சிவராஜ்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

வரலாற்று பாணியில் உருவாகியுள்ள இந்த படத்திற்கு தணிக்கைக் குழு யு/ஏ சான்றிதழ் வழங்கியுள்ளது. இப்படத்தின் பாடல்கள் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், 'கேப்டன் மில்லர்' திரைப்படத்தின் அதிரடி அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, இப்படத்தின் டிரைலர் நாளை வெளியாகவுள்ளதாக படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. இதனால் ரசிகர்கள் கொண்டாட்டத்தில் உள்ளனர்.

## இது சர்ச் இல்ல பாவமன்னிப்பு கேட்க கவனம் ஈர்க்கும் அருண் விஜய் பட டிரைலர்



இயக்குனர் ஏ.எல்.விஜய் இயக்கத்தில் தற்போது அருண் விஜய் நடித்துள்ள திரைப்படம் 'அச்சம் என்பது இல்லையே மிஷன் சாப்டர் 1'. இப்படத்தின் கதாநாயகியாக எமி ஜாக்சன் நடிக்க ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார்.

எம். ராஜசேகர் மற்றும் எஸ்.சுவாதி தயாரித்துள்ள இப்படத்தை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் லைகா நிறுவனம் வெளியிடவுள்ளது. 'அச்சம் என்பது இல்லையே மிஷன் சாப்டர் 1' திரைப்படம் பொங்கலுக்கு திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து இப்படத்தின் பாடல் வெளியாகி கவனம் பெற்றது.

## சத்தமே இல்லாமல் வெளியான கான்ஜூரிங் கண்ணப்பன்



இயக்குனர் சிம்பு தேவனிடம் உதவி இயக்குனராக பணிபுரிந்த செல்வின் ராஜ் சேவியர் இயக்கத்தில் உருவான திரைப்படம் 'கான்ஜூரிங் கண்ணப்பன்'. இந்த படத்தில் சதீஷ் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும், நாசர், சரண்யா பொன்வண்ணன், ஆனந்த்ராஜ், ரெஜினா கசன்ட்ரா, விடிவி கணேஷ், ரெடின் கிங்ஸ்லீ மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

திகில், ஃபான்டசி கலந்த திரைப்படமாக உருவாகும் இப்படத்தினை ஏஜிஎஸ் என்டர்டெயின்ட்மென்ட் நிறுவனம் தயாரிக்க யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். 'கான்ஜூரிங் கண்ணப்பன்' திரைப்படம் டிசம்பர் 8ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

அதுமட்டுமல்லாமல் வசூலையும் குவித்தது.

இந்நிலையில், 'கான்ஜூரிங் கண்ணப்பன்' திரைப்படத்தின் ஓடிடி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதன்படி, இப்படம் இன்று நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ளது. தற்போது தமிழில் மட்டும் வெளியாகியுள்ள இப்படம் விரைவில் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில் வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது.

## ஜூன் 1இல் டி20 உலகக் கோப்பை 2024.. இந்தியா–பாகிஸ்தான் போட்டி எப்போ தெரியுமா?



டி20 உலகக் கோப்பை 2024 கிரிக்கெட் தொடர் ஜூன் 1ம் தேதி துவங்க இருக்கிறது. இந்த தொடரை அமெரிக்கா மற்றும் கனடா இணைந்து நடத்துகின்றன. இந்த தொடரில் அதிகம் எதிர்பார்க்கப்படும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இடையேயான போட்டி ஜூன் 9ம் தேதி நியூ யார்க் நகரில் நடைபெற இருக்கிறது.

2024 உலகக் கோப்பை டி20 கிரிக்கெட் தொடரில் இந்திய அணி க்ரூப் ஏவில் இடம்பெற்றுள்ளது. இந்தியாவுடன் பாகிஸ்தான், அமெரிக்கா, கனடா மற்றும் அயர்லாந்து அணிகளும் இடம்பெற்றுள்ளன.

க்ரூப் சுற்றில் இந்திய அணி ஜூன் 5ம் தேதி அயர்லாந்து அணியையும், ஜூன் 9ம் தேதி பாகிஸ்தான் அணியையும், ஜூன் 12ம் தேதி அமெரிக்காவுடனும், ஜூன் 15ம் தேதி கனடாவையும் எதிர்கொள்ள இருக்கிறது.

டி20 கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரின் அரையிறுதி போட்டி ஜூன் 26ம் மற்றும் 27ம் தேதிகளில் நடைபெற இருக்கிறது. பார்படோஸ்இல் ஜூன் 29ம் தேதி இறுதிப்போட்டி நடைபெற இருக்கிறது.

## ஐசிசி டெஸ்ட் தரவரிசை: இந்தியாவை பின்னுக்குத் தள்ளியது ஆஸ்திரேலியா



சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான அணிகள் தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது.

இந்தப்பட்டியலில்இந்தியஅணியைப் பின்னுக்கு தள்ளி ஆஸ்திரேலியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

கேப் டவுனில் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற 2வது டெஸ்ட் போட்டியில் இந்தியா வென்று, தொடரை 11 என சமன் செய்தது. இதனால் புள்ளிப்பட்டியலில் ஆஸ்திரேலிய அணி இந்திய அணியை விட 1 ரேட்டிங் புள்ளிகள் கூடுதலாக பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்திய அணி 117 ரேட்டிங் உடன் 2வது இடத்தில் உள்ளது.

தென் ஆப்பிரிக்க அணி 4வது இடத்தில் நீடிக்கிறது. நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை மற்றும் வெஸ்ட் இண்டீஸ் அணிகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

## ஷபாலி, மந்தனா அதிரடி: முதல் டி20 போட்டியில் இந்தியா அபார வெற்றி




அலிசா ஹீலி தலைமையிலான ஆஸ்திரேலிய பெண்கள் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

முதலில் நடைபெற்ற ஒரே ஒரு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரை இந்திய அணி கைப்பற்றியது. அடுத்து நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 30 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா கைப்பற்றியது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரின் முதலாவது ஆட்டம் நவி மும்பையில் இன்று நடைபெற்றது. டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய ஆஸ்திரேலியா 19.2 ஓவரில் 141 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. போப் லிட்ச்பீல்ட் 49 ரன்னும், எல்லீஸ் பெரி 37 ரன்னும் எடுத்தனர்.

இந்திய அணி தரப்பில் டைட்டஸ் சாது 4 விக்கெட்டும், ஷ்ரேயங்கா பாட்டீல், தீப்தி சர்மா தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 142 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக ஸ்மிருதி மந்தனா, ஷபாலி வர்மா களமிறங்கினர்.

தொடக்கம் முதலே இருவரும் அதிரடியாக ஆடினர். கிடைத்த பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக விளாசினர். ஸ்மிருதி மந்தனா அரை சதமடித்து 54 ரன்னில் அவுட்டானார்.

இறுதியில், இந்திய மகளிர் அணி ஒரு விக்கெட்டுக்கு 145 ரன்களை எடுத்து வென்றதுடன் ஒருநாள் தொடரில் 10 என முன்னிலை வகிக்கிறது. ஷபாலி வர்மா 64 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.



**அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு**

**விளக்கம்:**

**ஒரு வருடைய வாழ்கைக்கு அறத்தை விட நன்மையானதும் இல்லை: அறத்தை போற்றாமல் மறப்பதை விடக்கொடியதும் இல்லை.**

## இவர்களே வெற்றிக்கு காரணம்: பந்துவீச்சாளர்களைப் புகழ்ந்த ரோகித் சர்மா



இந்தியா, தென் ஆப்பிரிக்கா இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நேற்று தொடங்கியது. இந்த போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதனால் டெஸ்ட் தொடர் 11 என சமனில் முடிவடைந்தது. இந்நிலையில் இந்திய அணியின் வெற்றி குறித்து பேசிய கேப்டன் ரோகித் சர்மா கூறியதாவது:

இந்த வெற்றிக்கு எங்களது அணியின் வேகப்பந்து வீச்சார்களான சிராஜ், பும்ரா, முகேஷ் குமார் மற்றும் பிரசித் கிருஷ்ணா ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சே காரணம். செஞ்சூரியனில் நடந்த முதல் போட்டியில் செய்த தவறை நாங்கள் புரிந்துகொண்டு அதிலிருந்து சில பாடங்களைக் கற்று தற்போது மிகச் சிறப்பாக மீண்டு வந்துள்ளோம். அதிலும் குறிப்பாக, எங்களது அணியின் பவுலர்கள் மிகச்சிறப்பாக பந்து வீசினர்.

சிராஜ் இந்தப் போட்டியில் அற்புதமாக பந்து வீசினார். அவர் இதேபோன்று எப்பொழுதுமே ஒரு மிகச்சிறப்பான ஸ்பெல்லை அணிக்காக வழங்கி வருகிறார். நாங்கள் முதல் இன்னிங்சில் 100 ரன்கள் வரை முன்னிலை பெற்றது மகிழ்ச்சி. ஆனாலும் கடைசி 6 விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்தன. இதுபோன்ற குறுகிய போட்டிகளில் இப்படித்தான் நடக்கும். இருந்தாலும் அனைவருமே சிறப்பாக செயல்பட்டனர். ஆசிய கண்டத்திற்கு வெளியே நாங்கள் பல போட்டிகளில் விளையாடியுள்ளோம். அதில் நமது அணி சிறப்பாகவே செயல்பட்டுள்ளது. இந்த தென் ஆப்பிரிக்க தொடரிலும் இந்திய அணி சிறப்பாகவே செயல்பட்டுள்ளது. இந்த தொடரை நம்மால் கைப்பற்ற முடியவில்லை என்றாலும் சமனில் முடித்ததை நினைத்தால் பெருமையாக இருக்கிறது. தென் ஆப்பிரிக்கா ஒரு பலமான அணி எப்போதுமே நமக்கு அவர்கள் சவால் அளிக்கும் வகையில் விளையாடி வருகிறார்கள். இந்த தொடரில் இந்திய அணி மிகச்சிறப்பாக விளையாடியது என தெரிவித்தார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.